<u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>
<u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>

2018–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28–ம் தேதி வெள்ளிக்கிழமை ( 28.09.2018 ) மாலை 4.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.மகாராஜன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி.

<u>மன்றப்பொருள்.1.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் கூடுதல் பொறுப்பு அவர்களின் செப்டம்பர் – 2018 மாதத்திய நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .
அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம் .
<u>கோப்பு எண் . 3792/2018/இ1</u>
**தீர்மான எண் : 190 அலுவலக குறிப்பின் படி பதிவு செய்யப்பட்டது .**

**<u>மன்றப்பொருள்.2.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12ல் நிலா நகர் அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள மனை எண்.86 முதல் 97 வரை மொத்தம் 12 மனைகள் உள்ளன. அதற்கு காலிமனை வரி விதிக்க திரு.இ.சுகுமார் என்பவர் விண்ணப்பித்துள்ளார். அவ்விண்ணப்பத்துடன் காலிமனை வரி செலுத்துவதற்கான தொகை காசோலையாக ரூ.24,934/– இணைத்து அனுப்பப்பட்டுள்ளார். அதன்படி, நிலா நகரில் உள்ள 12 மனைகளுக்கும் இந்நகராட்சியின் மூலம் காலிமனை வரி விதிக்கப்பட்ட எண்கள்.094/012/00038,39,40,41,42,43,44,45,46,47,48 மற்றும் 49. அதற்கான காலிமனை வரி தொகை ரூ.17,976/–ஆகும்.
இத்தொகைக்குரசீதுஎண்கள்.094/01/2/18–19/0003186,3187,188,3189,3190,3191,3192,3193,3194,3195,3196 மற்றும் 3197 நாள்.17.07.2018 அன்று ரசீதுகள் கணினியில் செலுத்தப்பட்டுள்ளது. தற்போது, அன்னார் இந்நகராட்சிக்கு கூடுதலாக தொகை ரூ.6958/– செலுத்தியுள்ளார். அத்தொகையினை மீள கேட்டு 28.08.2018 அன்று விண்ணப்பித்துள்ளார். எனவே, கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையினை திரு.இ.சுகுமார் என்பவருக்கு திரும்ப வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.3664/2018/அ1**
**தீர்மான எண் : 191 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள்.3.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான டாக்டர்.அம்பேத்கார் பேருந்து நிலைய கடைகளுக்கு கடை எண்.8 மற்றும் 9 கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 18.09.2018 அன்று கோரப்பட்டதில், கடை எண்.9க்கு மட்டும் கீழ்கண்ட நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டு ஏலக் கேள்வி எழுப்பியதை மன்றத்தின் பார்வைக்கு முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பொது ஏலம் கோரியவரின் பெயர் மற்றும் முகவரி | உயர்த்தப்பட்ட மறு ஏல பொது ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1 | திரு.த.சந்திரன்<br>37/1, திருவள்ளுவர் நகர்,<br>நெல்லிக்குப்பம். | ரூ.1,275/– |
| 2 | திரு.ச.சீனிவாசன் த/பெ சந்திரன்<br>37/1, திருவள்ளுவர் நகர்,<br>நெல்லிக்குப்பம். | ரூ.1,300/– |

அலுவலக குறிப்பு : வரிசை எண்.2ல் குறிப்பிட்டுள்ள ஏலதாரர் கடை எண். 9க்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கேட்ட தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.468/2006/அ1**

**தீர்மான எண் : 192 அலுவலக குறிப்பினை ஏற்று நகராட்சி பேருந்து நிலைய கடை எண் . 9க்கு திரு . ச. சீனிவாசன் த/பெ. சந்திரன் , 37/1 , திருவள்ளுவர் நகர் , நெல்லிக்குப்பம் என்பவரது உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியை ( ரூபாய் 1300/—ஐ) மாதவாடகையாக நிர்ணயிக்க அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள்.4.** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக மின் இணைப்பு சர்வீஸ் ஒயர் ஒன்றுடன் எரிந்து விட்டது . இதனால் மின்தடை ஏற்பட்டது . இதனை புதியதாக மாற்றம் செய்ய மின்சார வாரிய அலுவலர்கள் தெரிவித்ததின் அடிப்படையில் மின் இணைப்பு சர்வீஸ் ஒயர் புதியதாக மாற்ற தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ . 14000/— க்கும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் பணியை ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருமதி . S . பரிமளா மூலம் மதிப்பீட்டு விலை விகிதத்தில் மேற்க்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்க்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம் .

**கோப்பு எண்.4060/2018/இ1**

**தீர்மான எண் : 193 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள்.5.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல் முறை ந.க..எண். 12981/2018/இ3 நாள். 17.07.2018 ன் படி தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் (TURIP) 2018—19 ஆம் ஆண்டின் கீழ் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளை மேம்படுத்தும் பொருட்டு **ரூ.305/—**இலட்சம் மதிப்பீட்டிற்கு உள்ள பணிகளை ஒப்பந்தபுள்ளிக்காக 30.08.2018 அன்று மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தபுள்ளி செய்தி மலரிலும் விளம்பரம் செய்த வகையில் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புதுறை , சென்னை – 9 அவர்கள் மூலமாக கொடுக்கப்பட்டு என்த்ரால் கம்யூனிகேசன்ஸ் பிரைவேட் லிமிடெட் (Enthrall Communications Pvt Ltd) , சென்னை அவர்களுக்கு ரூ.18848/— பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 2022/2018/E1)**

**தீர்மான எண் : 194 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள்.6.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் சி1 பிரிவுக்கு கோப்புகள் , பணிப்பதிவேடுகள் மற்றும் முக்கியமான ஆவணங்களை பாதுகாப்பாக வைத்து உபயோகிக்க ஒரு பெரிய தடிமன் தகட்டிலான பீரோ தேவைப்படுவதால் அவசர அவசியம் கருதி வாங்க தோராய செலவினம் ரூ . 8000/— யை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : — மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 4058/2018/இ1)**

**தீர்மான எண் : 195 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள்.7.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பயன்பாட்டில் உள்ள TN 31 AF 0781 என்ற டம்பர் பிளேசர் வரை தகுதி சான்று முடியுற்றதால், 11.09.2018 முதல் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கி வட்டார போக்குவரத்து அலுவலகம், கடலூர் தகுதி சான்று(FC) பெற நகர மன்றத் தீர்மான எண்.178 நாள்.27.08.2018ன்படி, 12.09.2018 தேதியன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற

கீழ்கண்ட அரசு பதிவுபெற்ற நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியல் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் விலாசம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | OM SAKTHI ENGINEERING WORKS<br>D.S.N.NAGAR,KARAMANIKUPPAM, NELLIKUPPAM MAIN ROAD<br>CUDDALOR DISTRICT. | **81.600/–** |
| 2 | SARAVANA AUTOMOBILES<br>NO.47,TELC SHOPPING COMPLEX,<br>SEMMANDALAM , CUDDALORE-1 | **82,850/–** |

**அலுவலகக் குறிப்பு:**

1 . வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்1ல் கண்டுள்ள OM SAKTHI ENGINEERING WORKS D.S.N.NAGAR , KARAMANIKUPPAM, NELLIKUPPAM MAIN ROAD CUDDALOR DISTRICT. நெல்லிக்குப்பம் அளித்துள்ள குறைந்த ஒப்பந்நதப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதை அங்கிகரிக்கலாம் .

**ந.க.எண். 3582 /2018/எச்1**

**தீர்மான எண் : 196 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதித்தும் , எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கும் அங்கீகரிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள்.8.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பயன்பாட்டில் உள்ள TN 31 AF 1415 Tipper Lorry வாகனம் தகுதி சான்று முடியுற்றதால், 11.09.2018 முதல் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கி வட்டார போக்குவரத்து அலுவலகம், கடலூர் தகுதி சான்று(FC) பெற நகர மன்றத் தீர்மான எண்.179 நாள்.27.08 .2018ன்படி, 12.09.2018 தேதியன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்கண்ட அரசு பதிவுபெற்ற நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியல் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் விலாசம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | JOTHI DIESEL PUMP ENGINEERING<br>L4,INDUSTRIAL ESTATE<br>SEMMANDALAM CUDDALORE-1 | **79.000/–** |
| 2 | ANNAI DIESEL PUMP ENGINEERING<br>NO.47,TELC SHOPPING COMPLEX,<br>PONDY ROAD SEMMANDALAM , CUDDALORE-1 | **81,550/–** |

அலுவலகக் குறிப்பு:

1.வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்1ல் கண்டுள்ள JOTHI DIESEL PUMP ENGINEERING L4,INDUSTRIAL ESTATE SEMMANDALAM CUDDALORE-1 நெல்லிக்குப்பம் அளித்துள்ள குறைந்த ஒப்பந்நதப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதை அங்கீகரிக்காலம்

<u>ந.க.எண். 3602 /2018/எச்1</u>

**தீர்மான எண் : 197 அலுவலக குறிப்பினை ஏற்று குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிட்ட நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதை அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள்.9.</u>** மாவட்ட ஆட்சித் தலைவா் , மாவட்ட ஆட்சியரகம் , கடலூா் அவா்களின் ந.க.எண் . 117/செமதொ/2018 நாள் . 10.08.2018ன் படி "மாலை மலா் நாளிதழ்'' விநாயகா் சதுா்த்தியை முன்னிட்டு "தொழில் மலா் 2018 " சிறப்பு மலரில் நெல்லிக்குப்பம் நகராட்சியில் 2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை விளம்பரம் செய்ததில் மாலை மலா் நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ . 11550/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு : –</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 4105/2018/இ1)**

**தீர்மான எண் : 198 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள்.10.</u>** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சா் அவா்கள் கடந்த 05.06.2018 அன்று சட்டமன்ற பேரவை விதி 110–ன் கீழ் சுற்றுசூழல் பாதுகாக்க 01.01.19 முதல் நெகிழி பயன்பாடு இல்லா தமிழகதை உருவாக்கிட மறுசுழற்சி செய்யமுடியாத பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி இருப்பு மற்றும் உபயோகத்திற்கும் தடை விதித்து ஆணை வெளியிட்டுள்ளா்கள்.அதன் படி அரசாணை (நிலை) எண் 84 சுற்றுசூழல் மற்றும் வனத்துறை(EC2) துறை நாள் 25.06.2018 அன்று அரசாணையும் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையிலம் மாவட்ட ஆட்சித் தலைவா் அவா்களின் சுற்றறிக்கை ந.க.எண். பஇ2./6276/18 நாள் 30.08.2018 ன் படியும் பொதுமக்களிடம் பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்த முக்கியத்துவதை உணா்த்தும் வண்ணம் பள்ளி, கல்லுாரி மற்றம் இதா கல்விநிறுவனங்களின் மாணவ–மாணவிகளை கொண்டு பேரணிகள், ஊா்வலங்கள் மற்றும் விழிப்புணா்வு நிகழ்ச்சிகளை நகராட்சி பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் வசிக்கும்/கூடும் இடங்களில் நடத்தவும் மற்றும் நகா்பகுதிகளில் உள்ள பொது மக்கள் மற்றும் வியாபார நிறுவனங்களிடம் விழிப்புணா்வு ஏற்படுத்தும் வகையில் பிளாஸ்டிக் ஒழிப்பு வாசகங்கள் அடங்கிய விளம்பர பலகைகள், துண்டு பிரசுரம் மற்றும் ஸ்டிக்கா் போன்ற அறிவிப்பு விளம்பரங்கள் செய்யவும் , அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.50000/– த்தினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

<u>அலுவலகக்குறிப்பு : –</u> நெகிழி பயன்படுத்துதல் தடை செய்வதின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் . 3280/2018/**எச்1)**

**தீர்மான எண் : 199 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள்.11.</u>** தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 124(2)ன் படியும், அரசாணை எண் 11 (பல்வகைப்பட்டது) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 12.01.1998 ன் படியும், நகராட்சிகள் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந .க .எண் 12503/2018/ஆர்1 நாள் 21.05.2018 ன் படியும் இந்நகராட்சியில் தொழில்வரியினை 25% உயர்த்தி 01.10.2018 முதல்

நடைமுறைபடுத்துவது குறித்தான அறிவிப்பினை, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலர், கடலூர் அவர்களின் மூலம் தினமணி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு தொகை ரூ.8014/— யை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்கவும் மற்றும் மேற்படி அறிவிப்பினை மாவட்ட அளவிலான அரசிதழில் பிரசுரம் செய்த வகைக்கு இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கப்பட்ட தொகை ரூ.2100/— க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண் 48/2016/அ1)**

**அலுவலக குறிப்பு .** மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 200 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள்.12.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள நகராட்சி மற்றும் அரசுப்பள்ளிகளில் உள்ள கழிவறைகளை தினசரி சுத்தம் செய்வதற்கும், தினசரி துப்புரவு பணி மேற்கொள்வதற்கும் சம்மந்தப்பட்ட நகராட்சிகள் தனியார் மூலம் பணிகளை செய்திடவும் அதற்கான செலவினத்தை கல்வி வரி நிதியில் மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் துறையின் 23.11.2016 தேதியிட்ட அரசாணை(நிலை) எண்.16ன் மூலம் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதியில் 11 இடங்களில் உள்ள நகராட்சி மற்றும் அரசுப்பள்ளிகளில் துப்புரவு பணிமேற்கொள்ளப்பட்டது கழிவறைகளை சுத்தம் செய்வதற்கு ஒரு வருட காலத்திற்கு உத்தேசசெலவினம் ரூ.8,00,000 /— இலட்சத்தினை (ரூபாய் எட்டு இலட்சம்) தீர்மான எண்.111 நாள்.30.06.2017 அனுமதி வழங்கபட்டது. குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த திருமதி .எஸ்.புவனேஸ்வரி ஒப்பந்ததாரர் நெல்லிக்குப்பம் அவர்களுக்கு இதன் அடிப்படையில் 01.09.2017 முதல் 31.08.2018 ஒரு வருடத்திற்கு உத்திரவு வழங்கபட்டு செலவு செய்யபட்ட தொகை ரூ.6,59,340/—போக மீதிமுள்ள தொகை 1,40,660/— னை பழைய ஒப்பந்தபுள்ளி விகிதத்தில் பணி செய்யவும் தொகையை வழங்கவும், இரண்டு மாதம் காலம் 31.10.2018 வரை நீட்டித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம்

**ந.க.எண்.1892/2017/எச்1**

**தீர்மான எண் : 201 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள்.13.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 24 எண்ணிக்கை சமுதாய கழிவறை கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது. இக்கழிவறைகளை தினசரி சுத்தம் செய்வதற்கு போதிய மனித சக்தி நகராட்சி சுகாதாரப் பிரிவில் இல்லாத காரணத்தினால் சரிவர பாமரிக்க இயலாத நிலை உள்ளது. எனவே பொதுமக்கள் சமுதாய கழிவறையை தினசரி பயன்படுத்தும் வகையில் தனியார் மூலம் பராமரிக்கப்பட வேண்டும். நகரிலுள்ள 25 எண்ணிக்கை சமுதாய கழிவறையில் 5 எண்ணிக்கை சுய உதவிக்குழுவால் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 20 சமுதாய கழிவறைகளை தினசரி சுத்தம் செய்து பராமரிக்கும் பணியை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் 0மேற்கொள்வதற்கு உத்தேச செலவினம் ரூ.14,50.000/—ஐ (ரூபாய் பதினாறு லட்சம் மட்டும்) தீர்மான எண்.112 நாள்.30.06.2017 அனுமதி வழங்கபட்டது.குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த திருமதி .எஸ்.புவனேஸ்வரி ஒப்பந்ததாரர் நெல்லிக்குப்பம் அவர்களுக்கு இதன் அடிப்படையில் 01.09.2017 முதல் 31.08.2018 ஒரு வருடத்திற்கு உத்திரவு வழங்கபட்டு செலவு செய்யபட்ட தொகை ரூ.9,88,808/—போக மீதிமுள்ள தொகை 4,61,192/— உள்ளது . பழைய ஒப்பந்தபுள்ளி விகிதத்தில் பணி செய்திட ஒப்பந்ததாரர் சம்மதம் தெரிவித்துள்ளதல் ஏற்கனவே நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள தொகைக்குள் செலவினம் மேற்கொள்ள மூன்று மாதம் காலம் 30.11.2018 வரை ஒப்பந்தத்தை நீட்டித்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.1892/2017/எச்1**

**தீர்மான எண் : 202 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள்.14.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண் . 1 விஸ்வநாதபுரத்தில் 15000 லிட்டர் கொள்ளவு கொண்ட நீர் தேக்க தொட்டி மூலம் 385 குடும்பங்களுக்கு சுமார் 1625 நபர்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது . இந்த மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி சேதம் அடைந்தும் உயரம் குறைவாக உள்ளதாலும் கடை தெரு வரை குடிநீர் செல்லாததால் குடிநீர் விநியோகம் பாதிக்கின்றது . எனவே இதனை இடித்து விட்டு , அதே இடத்தில் புதியதாக 1,00,000 லிட்டர் கொள்ளவு கொண்ட மேல் நிலை நீர் தேக்க தொட்டி கட்ட தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ . 23,00,000/—க்கும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

<u>ந.க.எண்.4163/2018/இ1</u>

**தீர்மான எண் : 203 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள்.15.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி வாழப்பட்டு பகுதியில் 60000 லிட்டர் கொள்ளவு கொண்ட நீர் தேக்க தொட்டி மூலம் 510 குடும்பங்களுக்கு சுமார் 2152 நபர்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது . இந்த மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி சேதம் அடைந்து உள்ளது . மேலும் வழங்கப்படும் குடிநீர் அளவு போது மானதாக இல்லாததால் இதனை இடித்து விட்டு அதே இடத்தில் புதியதாக 1,00,000 லிட்டர் கொள்ளவு கொண்ட மேல் நிலை நீர் தேக்க தொட்டி கட்ட தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.23,00,000/—க்கும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

<u>ந.க.எண்.4164/2018/இ1</u>

**தீர்மான எண் : 204 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள்.16.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண் . 3 முள்ளிகிராம்பட்டு நகராட்சி பள்ளியில் மாணவர்கள் மதிய உணவு திறந்த வெளி மண் தரையில் உட்கார்ந்து உண்பதால் மிகவும் சிறம்மமாக உள்ளது . மாணவர்களின் சுகாதாரத்தினை கருத்தில் கொண்டு மழை மற்றும் வெய்யில் இவைகள் பாதிப்பு ஏற்படா வண்ணம் புதியதாக Colour Coater Sheet அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2,00,000/—க்கும் செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது . அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

<u>ந.க.எண்.4189/2018/இ1</u>

**தீர்மான எண் : 205 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள்.17.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண் . 12 சோழவல்லி புது தெரு மற்றும் வைத்திலிங்க தெருவில் மழைக்காலங்களில் மழை நீர் தேங்கி வெளியேற முடியாத நிலையில் உள்ளது . இப் பகுதி வாழ் பொது மக்களின் பொது சுகாதாரத்தினை கருத்தில் கொண்டு மழை நீர் வடிவதற்கு ஏதுவாக சாலைகளின் குறுக்கே சிறுபாலம் கட்டுவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2,00,000/—க்கும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

<u>ந.க.எண்.4191/2018/இ1</u>

**தீர்மான எண் : 206 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள்.18.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண் . 22 மௌான அப்துல் கரீம் தெரு பள்ளி வாசல் அருகில் மழை நீர் தேங்கி உள்ளது . மழை நீர் தேங்கி நின்று சுகாதார கேடு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு மேற்கண்ட இடத்தில் மழை நீர் வெளியேற மழை நீர் வடிகால் கட்டுவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,00,000/—க்கும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

<u>ந.க.எண்.4190/2018/இ1</u>

**தீர்மான எண் : 207 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள்.19.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்பாதி மற்றும் நெல்லிக்குப்பம் கிராமம், வார்டு– D, பிளாக்– 23 , 11 ,T.S.No.4pt ,5pt , 7/1pt,7/2 இடத்தின் பரப்பு **137649.60** சதுரடியாகும். இவ்விடம் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவாக அமைந்ததால் மனைப்பிரிவின் உரிமையாளர் திருமதி.S.K.சபரியா பேகம் என்பவர் குடியிருப்பு மனைப்பிரிவினை வரன் முறை செய்ய நகர் ஊரமைப்பு ஆணையருக்கு விண்ணப்பம் செய்ததின் பேரில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் வி.ம. அவர்கள் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (வி.ம.) எண்R 934 / 2018 என எண்ணிட்டு குடியிருப்பு மனைப் பிரிவினை கொள்கையளவில் ஒப்புதல் செய்து இந்நகராட்சிக்கு 18.09.2018ல் வரப்பெற்றுள்ளது. ரஹ்மத் நகர் விஸ்தரிப்பு மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்காவினை ரூ.100/– முத்திரை தாளில் தானமாக பெற்றுக் கொள்ளவும், மனுதாரர் கட்டணங்கள் செலுத்தியதும் அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:-</u>**

நெல்லிக்குப்பம் கிராமம், கீழ்பாதி கிராமம், வார்டு– D, பிளாக்–11,23 நகரளவு எண் 4pt ,5pt , 7/1pt,7/2ல் இடம் **137649.60** சதுரடி குடியிருப்பு மனைப்பிரிவாக கொள்கையளவில் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (வி.ம.) எண்R 934 / 2018 என எண்ணிட்டு வரப்பெற்றுள்ளது. இதிலுள்ள சாலை மற்றும் பூங்காவினை நகராட்சி ஆணையர் பெயரில் ரூ.100/– முத்திரை தாளில் தானமாக பெற மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மனுதாரருக்கு கட்டணங்கள் செலுத்தியதும் மனைக்கு வரன்முறை உத்திரவு அளிக்கலாம்.

ந.க.எண்:- 3915/2018/F1

**தீர்மான எண் : 208 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்தும் , மனுதாரர் கட்டணங்களை நகராட்சிக்கு செலுத்திய பின்பு வரன் முறை செய்திடவும் அனுமதிக்கப்பட்டது.**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி.